## (இ) விலைவாசிகளும், கூலிகளும்

கொழும்புத் தொழிலாளர் வர்க்கக் குடும்பங்களின் வரவு செலவு சம்பந்தமாக, வேறு குறிகாட்டிகள் இல்லாதமையினால், குடிசனமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் கணிக்கப்பட்ட நுகர்வோர் விலைக் குறிகாட்டி வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட மாற்றங்களை அளவிடுவதற்கு உபயோகிக்கப் பட்டுள்ளது. இக்குறிகாட்டியில் உட்படும் பொருட்களின் அளவுப் பிரமாணங்கள் 1953ம் ஆண்டின் *VI*வது பருவப் பத்திரத்தின் சிபார்சுகளை ஆதாரமாகக் கொண்டவையாகும். பின்வரும் அட்டவணை கடந்த மூன்று வருட காலத்தில் இந்நுகர்வோர் விலைக்குறிகாட்டியில் ஏற்பட்ட மாற்றங்களைப் பொருட்களின் படியும், துறைகளின்படியும் பிரித்துக் காட்டுகின்றது.

### அட்டவணை II இ-1

### கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி (1952=100)

| வருடம் | சகல விடயங்களும் | பொருட்களின்படி | | | | | துறைகளின் படி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உணவு (61·9%) | உடை (9·4%) | எரிபொருள் விளக்கு (4·3%) | வாடகை (5·7%) | ஏனைய (18·7%) | உள் நாட்டுத் தொகுதி (51%) | இறக்கு மதித் தொகுதி (44%) | ஏற்று மதித் தொகுதி (5%) |
| 1960 | 103·5 | 100·8 | 95·1 | 102·7 | 101·5 | 117·5 | 108·9 | 93·7 | 138·4 |
| 1961 | 104·8 | 99·8 | 103·9 | 104·4 | 101·5 | 122·8 | 112·3 | 94·6 | 119·1 |
| 1962 | 106·3 | 100·9 | 108·2 | 105·6 | 101·5 | 124·9 | 113·9 | 96·7 | 113·8 |

மூலங்கள்: குடிசனமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மகா வங்கி.

ஓடைப்பிரிவுகளின் தலையில் உள்ள எண் தொகைகள் அளவுப் பிரமாணங்களைக் குறிப்பனவாகும்.

ஒவ்வொரு மாதத்திலும் ஏற்பட்ட மாற்றங்கள் பின்வருமாறு:—

### அட்டவணை II இ-2

### கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியில் ஏற்பட்ட மாற்றங்கள் (1952=100)

| மாதம் | சகல விடயங்களும் | | | இறக்குமதித் தொகுதி | | | உள்நாட்டுத் தொகுதி | | | ஏற்று மதித் தொகுதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1961 | 1962 | மாற்றம் % | 1961 | 1962 | மாற்றம் % | 1961 | 1962 | மாற்றம் % | 1961 | 1962 | மாற்றம் % |
| தை .. | 104·1 | 105·5 | +1·3 | 92·9 | 95·3 | +2·6 | 112·0 | 113·7 | +1·5 | 122·8 | 113·2 | −7·8 |
| மாசி .. | 103·9 | 105·9 | +1·9 | 94·0 | 95·6 | +1·7 | 110·5 | 113·7 | +2·9 | 126·0 | 113·6 | −9·8 |
| பங்குனி .. | 103·3 | 106·2 | +2·8 | 92·0 | 97·5 | +6·0 | 111·3 | 113·0 | +1·5 | 123·2 | 114·7 | −6·9 |
| சித்திரை .. | 103·9 | 106·3 | +2·3 | 93·6 | 97·1 | +3·7 | 111·0 | 113·5 | +2·3 | 123·4 | 113·8 | −7·8 |
| வைகாசி .. | 104·0 | 106·5 | +2·4 | 93·9 | 97·6 | +4·0 | 111·1 | 113·4 | +2·1 | 123·3 | 114·6 | −7·1 |
| ஆனி .. | 104·5 | 106·6 | +2·0 | 94·6 | 95·8 | +1·3 | 111·7 | 115·2 | +3·1 | 121·2 | 113·7 | −6·2 |
| ஆடி .. | 104·5 | 106·4 | +1·8 | 95·6 | 96·7 | +1·2 | 111·2 | 114·3 | +2·8 | 114·8 | 112·1 | −2·4 |
| ஆவணி .. | 105·4 | 106·2 | +0·8 | 96·5 | 97·6 | +1·1 | 112·3 | 113·2 | +0·8 | 113·2 | 111·3 | −1·7 |
| புரட்டாதி .. | 105·4 | 106·2 | +0·8 | 95·8 | 97·1 | +1·4 | 112·9 | 113·3 | +0·4 | 114·7 | 112·0 | −2·4 |
| ஐப்பசி .. | 105·9 | 106·5 | +0·6 | 95·6 | 96·4 | +0·8 | 113·8 | 114·5 | +0·6 | 116·8 | 113·6 | −2·7 |
| கார்த்திகை .. | 105·9 | 107·2 | +1·2 | 95·3 | 96·6 | +1·4 | 114·2 | 115·7 | +1·3 | 115·8 | 114·7 | −0·9 |
| மார்கழி .. | 106·2 | 106·4 | +0·2 | 95·0 | 97·2 | +2·3 | 115·1 | 113·3 | −1·6 | 113·6 | 118·0 | +3·9 |
| சராசரி .. | 104·8 | 106·3 | +1·4 | 94·6 | 96·7 | +2·2 | 112·3 | 113·9 | +1·4 | 119·1 | 113·8 | −4·5 |

மூலங்கள்: குடிசனமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மகா வங்கி.

கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியின் துணைகொண்டு அளவிட்டு நோக்கின், 1962-ல் சில்லறை விலைகள், 1961ம் ஆண்டிலும் பார்க்கச் சராசரி 1.4 சதவீதத்தாற் கூடியன ஆகும். இவ்வுயர்ச்சி, உள்நாட்டுத் தொகுதிப் பொருட்களின் 1.4 சதவீத விலை உயர்ச்சியும், இறக்குமதித் தொகுதிப் பொருட்களின் 2.2 சதவீத விலை உயர்ச்சியும், ஒன்று சேர்ந்து ஏற்றுமதித் தொகுதிப் பொருட்களின் 4.5 சதவீத விலை வீழ்ச்சியை மேலதிகமாக ஈடுசெய்தமையால், ஏற்பட்டது. கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியில் ஏற்றுமதித் தொகுதிப் பொருட்களின் ஒப்பியல் முக்கியத்துவம் ஆக 5 சதவீதமாகும்.

அட்டவணை II இ-1ல் உள்ள பொருட்தொகுதிக் குறிகாட்டிகளை ஆராய்ந்து பார்க்குமிடத்து, சகல பொருட்களுக்குமான சராசரிக் குறிகாட்டி 1961ம் ஆண்டிலும் பார்க்க ஓரளவு கூடியதாக விளங்குகின்றது. உணவுப் பொருட்கள் 1.1 சதவீதத்தாலும், உடைகள் 4.1 சதவீதத்தாலும், எரிபொருள் விளக்கு 1.1 சதவீதத்தாலும், ஏனைய பொருட்கள் 1.7 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளன.

உணவுப் பொருட்களை உற்பத்தித் தோற்றத் துறைகளின்படி பிரித்து ஆராயும் பொழுது, உபபகுதிகளில் அவற்றின் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

**அட்டவணை II இ-3**

**கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியின் உணவுத் தொகுதியின் உபபகுதிகளின் விலைக்குறிகாட்டிகள்**

**(1952=100)**

| வருடம் | சகல உணவு | உள்நாட்டு உணவு | ஏற்றுமதி உணவு | இறக்குமதி உணவு |
|---|---|---|---|---|
| 1960 .. .. | 100·8 | 104·7 | 138·4 | 91·2 |
| 1961 .. .. | 99·8 | 110·6 | 119·1 | 87·2 |
| 1962 .. .. | 100·9 | 110·7 | 113·8 | 90·2 |

மூலங்கள்: குடிசனமதிப்புப் புள்ளிவிபரத்திணைக்களம், இலங்கை மகா வங்கி.

1962ம் ஆண்டு உள்நாட்டு உணவுப் பொருட்களின் விலைக்குறிகாட்டி முந்தைய ஆண்டில் இருந்ததிலும் பார்க்க 0.1 சதவீதத்தால் உயர்ந்தது. இவ் உயர்ச்சி, ஏனைய காரணங்களுடன் மோட்டோர் எரி எண்ணெயின் மேல் அதிகரித்த தீர்வை விதிக்கப்பட்டமையால் உணவுப் பொருட்களின் சுமைகூலியும் அதிகரித்தமையைப் பிரதிபலிக்கின்றது. ஏற்றுமதி உணவுகளின் உபபகுதி 4.5 சதவீதம் வீழச்சியடைந்தமைக்கு, தெங்குப்பொருட்களின் ஏற்றுமதிக் கேள்வி குறைந்தமையால் உள்நாட்டு விலைகள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். இறக்குமதி உணவுகளின் தொகுதி 3.4 சதவீதத்தால் உயர்ந்தமை, முட்டை, உருளைக் கிழங்கு, கோப்பி ஆகிய பொருட்களின் மீது விதிக்கப்பட்ட உயர்ந்த தீர்வை, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் ஆகியனவற்றின் முழுமையான பிரதிபலிப்பேயாகும். கோதுமை மாவின் விலை 1961ம் ஆண்டு ஆடி மாதம் உயர்த்தப்பட்டதன் முழுப்பலனும் 1962ம் ஆண்டு முழுவதும் நிலவியது. இறக்குமதித் தொகுதிப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு வேறோர் காரணம், 1962ம் ஆண்டு தை மாதம் முதல் சிவப்புச் சீனி கிடையாமற் போனதேயாகும்.

1961ம் ஆண்டு ஆடி மாதம் உடைகளின் மீது உயர்ந்த தீர்வைகளும், இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டதன் பலன் 1962ம் ஆண்டு முழுவதும் நிலவியதனுலும் 1962ம் ஆண்டு ஆடி மாதம் மேலும் கூடுதலான

தீர்வைகள் விதிக்கப்பட்டதனுலும், உடைகளின் விலைகளில் உயர்ச்சி ஏற்பட்டது.

எரிபொருள் விளக்கு என்ற தொகுதிப் பொருட்களின் விலை உயர்ச்சிக்கு முக்கியமான காரணங்களாவன, 1961ம் ஆண்டு ஆடி மாதம் மண்எண்ணெயின் மீது விதிக்கப்பட்ட கூடுதலான தீர்வையினதும், தீப்பெட்டிகளின் மீது விதிக்கப்பட்ட கூடுதலான சுங்கவரியினதும் பலன்கள், 1962ம் ஆண்டு முழுவதும் நிலவியமையேயாகும். ஏனையவை என்ற உபதொகுதியின் உயர்ச்சி, பெரும் பாலும், கூடுதலான தீர்வைகள் 1961ம் ஆண்டு ஆடி மாதத்திலும், 1962ம் ஆண்டு ஆடி மாதத்திலும் விதிக்கப்பட்டமையால் ஏற்பட்டது.

கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி, ஆகத் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்கைச் செலவில் ஏற்பட்ட மாற்றங்களையே அளவிடுகின்றது. தொழிலாளர் வர்க்கத்தின் வரவு செலவுகளில், உணவுப் பொருட்களின் பேரில் உள்ள செலவுகள், மொத்தச் செலவீட்டில் ஒரு கூடுதலான முக்கியத்துவம் வகிக்கின்றன. அதாவது அடிவருட காலத்தில் மொத்த நுகர்ச்சிச் செலவில் 61.9 சதவீதமானவை உணவுப் பொருட்களின் பேரில் உள்ளனவாகும். இதில் மிகக் குறிப்பிடத்தக்க பகுதி, அதாவது 14.9 சதவீதமானவை மான்யம் பெறும் உணவுப் பொருட்களாக உள்ளன. அன்றியும் ஏனைய உணவுப் பொருட்களான பருப்பு, மாசிக்கருவாடு, மீன் கருவாடு முதலியன கட்டுப்பாட்டு விலைகளின்படி விநியோகிக்கப்படுவனவையாகும். எனவே நிலையான விலைகளின்படி இவ்வித பொருட்கள் விநியோகிக்கப்பட்டமை கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டியை அதிதீட்சணமாக உயராவண்ணம் தடுக்க உதவியது.

எனினும், தொழிலாளர் வர்க்கத்தின் கேள்விக்கு அப்பாற்பட்ட போகப் பொருட்களினதும் ஓரளவான போகப்பொருட்களினதும் விலைகள், கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியிற் பிரதிபலிக்கும் உயர்ச்சியிலும் பார்க்கக் கூடுதலாக உயர்ந்திருக்கக்கூடும். 1962ம் ஆண்டு ஆடி மாதத்திலும் ஆவணி மாதத்திலும் (1962ம் ஆண்டின் 19ம் இலக்க ''அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின்'' கீழ்) பல பொருட்களின்மீதுள்ள இறக்குமதித் தீர்வைகள் உயர்த்தப்பட்டன. இவ்வுயர்ந்த இறக்குமதித் தீர்வைகளிற் சில, அதிகரித்த விலை வடிவத்தில் நுகர்வோர்மேற் சுமத்தப்பட்டன. எனினும் வேறு சில, இற்றைவரை, விலைமட்டங்களை அவ்வளவு தூரம் பாதிக்கவில்லை. முதற்கூறிய வர்க்கத்தைச் சேர்ந்த பொருட்களில் நீண்டகால உபயோகமுள்ள வீட்டுப் பாவிப்புக்கான பலதரப்பட்ட பொருட்களும், பின்னர் கூறிய வர்க்கத்தில் பலவித பாவிப்புக்குரிய ஆடை வகைகளும் அடங்கும். பல சந்தர்ப்பங்களில் உயர்ந்த தீர்வைகளை ஒத்த அளவில் விலைகள் ஒரேவிதமாக உயராமல் இருந்தமைக்கு உள்ள காரணம், கையிருப்புக்கள் இருந்தமையேயாகும். உதாரணமாக, ஆடைவகைகள் தீர்வை உயர்த்தப்படுவதற்குமுன் ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டமையால் அவற்றின் விலைஉயர்ச்சி தடைப்பட்டது. ஆனல், தீர்வைக்கு முந்திய இறக்குமதிகளும் கையிருப்புகளும் சாதாரண தேவைகளுக்கான தொகையிலும் பார்க்கக் கூடுதலாக இல்லாமல் இருந்த துறைகளில், அப்பொருட்களின் மேல் விதிக்கப்பட்ட உயர்ந்த தீர்வைகளுக்குத் தக்க அளவில் நுகர்வோர் விலைகள் உயர்த்தப்பட்டன.

**கூலிகள்**

1962ம் ஆண்டு பெரும்பான்மையான தொழிலாளர்களின் கூலிவிகிதங்களில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. சில துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன

எனினும் அவை வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இணங்க அதிகரித்த துணைச் சம்பளங்களாகவே இருந்தன. 1961ம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்திற்கும், இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்திற்கும் இடையில் முடிவாக்கப்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் கீழ், 59 வர்த்தக நிலையங்களில் வேலை செய்யும் 6000 இலிகிதர்களின் சம்பளங்கள், 1961ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதி தொடக்கம் இரண்டு ஏற்றப்படிகளால் அதிகரிக்கப்பட்டன. இவ் அதிகரிப்பு 1962ம் ஆண்டு முழுவதும் தொடர்ந்து நடைமுறையில் இருந்தது. 1962ம் ஆண்டு ஆனி மாதம் தொழில்நீதி மன்றத்தாற் தீர்ப்பு அளிக்கப்பட்ட ஒரு சம்பள வளர்வுத் திட்டத்தின்படி வங்கி ஊழியர்களின் கூலி விகிதங்கள் 1960ம் ஆண்டு ஐப்பசி மாதம் முதல் இரண்டு முதல் ஏழு ஏற்றப்படிகளால் அதிகரிக்கப் பட்டன.

தொழிலாளர்களின் கூலி விகிதங்களில் வருடாவருடம் ஏற்பட்ட மாற்றங்களை விளக்கும் குறிகாட்டிகள், ஆக அரசாங்க ஊழியர், அரசாங்க பாடசாலை ஆசிரியர், கூலி நிர்ணயசபை வாய்ந்த தொழில்களில் உள்ள தொழிலாளர் ஆகியோர் சம்பந்தப்பட்ட வரையிலுமே கிடைத்துள்ளன.

கடந்த மூன்று வருட காலத்தில் அரசாங்க ஊழியர், அரசாங்க பாடசாலை ஆசிரியர் ஆகியோரினது கூலி விகிதங்களிலும், மெய்க் கூலி விகிதங்களிலும் ஏற்பட்ட மாற்றங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை II இ-4

அரசாங்க ஊழியர்களுக்கான கூலி விகிதக் குறிகாட்டி எண்கள்

(1952=100)

| காலம் | இலிகிதரும் தொழிற் பயிற்சி பெற்றேரும் | | சிறுசேவை ஊழியர் | | மத்திய அரசாங்க ஊழியர் (அ) | | அரசாங்கப்பாடசாலை ஆசிரியர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கூலி | மெய்க் கூலி | கூலி | மெய்க் கூலி | கூலி | மெய்க் கூலி | கூலி | மெய்க் கூலி |
| 1960 | 122·3 | 118·2 | 130·4 | 126·0 | 126·7 | 122·4 | 117·4 | 113·4 |
| 1961 | 122·3 | 116·7 | 130·4 | 124·4 | 126·7 | 120·9 | 117·4 | 112·0 |
| 1962 | 122·3 | 115·0 | 130·4 | 122·6 | 126·7 | 119·2 | 117·4 | 110·4 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

(அ) இலிகிதர், தொழிற்பயிற்சி பெற்றேர், சிறுசேவை ஊழியர் ஆகியோரை இணைத்துக் கணித்த குறிகாட்டி.

1962ம் ஆண்டு அரசாங்க ஊழியர்களின் கூலி விகிதங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. எனினும், 1962ம் ஆண்டில் வாழ்க்கைச் செலவு உயர்ந்ததன் பயனுக அவர்களின் மெய்க் கூலி விகிதங்கள் 1.4 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றன.

தனிப்பட்டோர் துறையிலுள்ள கூலி விகிதங்களின் நடமாட்டங்கள் பற்றி கிடைக்கக்கூடிய விபரங்கள், கூலி நிர்ணயசபை அமைக்கப்பட்ட துறைகளில் உள்ள தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவையாகவே மட்டும் உள்ளன. கூலி நிர்ணயசபையின் கண்காணிப்பின் கீழ் உள்ள தொழிலாளர் களுள் 89.4 சதவீதமானேர் விவசாயத் தொழிலாளர்களாகும். கூலி நிர்ணய சபை வாய்ந்த தொழில்களிலுள்ள தொழிலாளரின் கூலிவிகிதங்களினதும் மெய்க் கூலி விகிதங்களினதும் நடமாட்டங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

## அட்டவணை II இ-5

## கூலிநிர்ணயசபையிலுள்ள தொழில்களில் உள்ள தொழிலாளர்களின் கீழ்மட்டக் கூலிவிகிதக் குறிகாட்டிகள்

**(1952=100)**

| காலம் | விவசாயத் தொழிலாளர் | | கைத்தொழில் வர்த்தகத் தொழிலாளர் | | கூலிநிர்ணயசபைவாய்ந்த தொழில்களில் உள்ள சகல தொழிலாளர்களும் (அ) | |
|---|---|---|---|---|---|---|
| | கீழ்மட்டக் கூலி | மெய்க் கூலி | கீழ்மட்டக் கூலி | மெய்க் கூலி | கீழ்மட்டக் கூலி | மெய்க் கூலி |
| 1960 | 110·2 | 106·5 | 128·1 | 123·8 | 111·8 | 108·0 |
| 1961 | 110·7 | 105·6 | 128·4 | 122·5 | 112·3 | 107·2 |
| 1962 | 111·9 | 105·2 | 129·5 | 121·8 | 113·7 | 106·9 |

மூலங்கள்: குடிசனமதிப்புப் புள்ளி விபரத்திணைக்களம்,
இலங்கை மகா வங்கி.

(அ) விவசாயத் தொழிலாளர்கள், கைத்தொழில், வர்த்தகத் தொழிலாளர்கள் ஆகியோரை இணைத்துக் கணித்த குறிகாட்டி.

1962ம் ஆண்டு கூலி நிர்ணயசபை வாய்ந்த தொழில்களில் உள்ள தொழிலாளரின் கூலி விகிதங்கள் 1.1 சதவீதத்தால் அதிகரித்தன. இவ்வதிகரிப்பு, விவசாயத் தொழிலாளர்களின் கீழ்மட்டக் கூலி 1.1 சதவீதத்தால் அதிகரித்தமையாலும், கைத்தொழில் வர்த்தகத் தொழிலாளர்களின் கூலி 0.9 சதவீதத்தால் அதிகரித்தமையாலும் ஏற்பட்டது. எனினும் அவர்களின் மெய்க்கூலி விகிதங்கள் முறையே 0.4 சதவீதத்தாலும், 0.6 சதவீதத்தாலும் குறைவுற்றன.